பாடம் 8

நெகேமியா–தேவ ஊழியர்

ஆலயத்தைப் புதுப்பிக்கவேண்டும். வேதாகமத்தில், எருசலேம் மதில்களைச் சீராக்குவதற்குத் தேவையான உதவியை ராஜாவிடமே நெகேமியா கேட்டார்.

''ஆனானி, உன்னை மீண்டும் பார்ப்பது எவ்வளவு சந்தோஷமாக இருக்கிறது தெரியுமா?'' என்ற நெகேமியா தன் சகோதரனைத் தழுவிக்கொண்டார். அப்போதுதான் யூதாவிலிருந்து, ஆனானியும் வேறு சிலரும் வந்திருந்தார்கள்.

நெகேமியா அவர்களிடம் தன் தேசமாகிய எருசலேமைப் பற்றி ஆர்வமாக விசாரித்தார். ஆனால், ''எருசலேம் நகரம் இடிபட்டதும் அதின் மதில்கள் சுட்டெரிக்கப்பட்டதுமாய் இருக்கிறது'' என்று அவர்கள் சொல்லக்கேட்ட நெகேமியா வேதனையோடு உட்கார்ந்து விட்டார்.



சிலவாரங்கள் கழித்து நெகேமியா வேதனையோடு புலம்பி, உபவாசித்து ஜெபித்தார். ''ஆண்டவரே! என்னுடைய ஜெபத்தைக் கேட்டருளும்; எருசலேம் தேசத்தை நினைத்தருளும்; ராஜாவிடத்தில் உதவி கேட்கும்போது, தேவரீர் ராஜாவின் உள்ளத்தில் பேசி அவர் என் வார்த்தைகளுக்குச் சம்மதிக்க உதவும்; தயவுசெய்யும்'' என்று கெஞ்சினார்.

ஒருநாள் மாலை நெகேமியா தன் வழக்கப்படி, ராஜாவுக்குத் திராட்சரசம் கொடுத்துக்கொண்டிருந்தார்.

அப்போது ராஜா மிகவும் சோர்வாயிருந்த நெகேமியாவிடம், ''ஏன், நீ துக்கமாக இருக்கிறாய்? வியாதியாகத் தெரியவில்லையே, என்ன கவலை உனக்குச் சொல்'' என்று மிகவும் பரிவுடன் கேட்டார்.

ராஜாவின் முன்பாக நிற்கும் அந்த வேளையிலும் நெகேமியா மனதிற்குள் தேவனிடம் ஜெபித்தார்.

பின்னர், ''ராஜாவே! நீர் என்றும் வாழ்க; என் தேசமாகிய எருசலேம்

மனன வசனம்

தேவனுடைய தயவுள்ள கரம்
என்மேல் இருந்தது.
நெகேமியா 2:8.

பாழாய்க்கிடக்கிறது. அதின் வாசல்கள் அக்கினியால் சுட்டெரிக்கப்பட்டவைகளாய்க் கிடக்கிறது'' என வேதனையோடு சொன்னார்.

''நான் உனக்கு என்ன உதவி செய்யவேண்டும்?'' என்று ராஜா கேட்டார் .

அப்போது நெகேமியா மனதிற்குள் தேவனைத் துதித்துக் கொண்டே, ஜெபித்தார். பின்னர், ராஜாவிடம், ''என் தேசத்தின் மதில்களைத் திரும்பவும் கட்டுவதற்கு உதவவேண்டும். கட்டுவதற்குத் தேவையான மரங்களைத் தருமாறு, வனத்துக் காவலாளனாகிய ஆசாபுக்கு ஒரு கடிதம் தரவேண்டும்'' என்று கேட்டார்.

ராஜாவும் நெகேமியா கேட்டுக்கொண்டபடியே கடிதம் எழுதிக்கொடுத்தார். அதுவுமன்றி, நெகேமியாவுடன் தம் அதிகாரிகளை வழித்துணையாக அனுப்பிவைத்தார். நெகேமியாவின் நீண்ட பயணத்துக்குத் தேவையான யாவையும் ஏற்பாடு செய்தார்.

தேவனுடைய கிருபையினாலும், ராஜாவின் உதவியினாலும் நெகேமியா சுகமாக எருசலேம்வந்து சேர்ந்தார்.

மூன்று நாட்களுக்குப் பின், ஓர் இரவில் கழுதையின்மேல் ஏறிச்சென்று பழுதுபட்டுக் கிடக்கும் நகரத்தைப் பார்வையிட்டார். அவ்வழியாகச் செல்வதே அவருக்குச் சிரமமாக இருந்தது.

பின், அதிகாரிகளைச் சந்தித்து நெகேமியா பேசினார். ராஜாவிடம் தான் பெற்று வந்த உத்தரவுகளைச் சொன்னார். ''நாம் மீண்டும் நம் நகரத்தின் மதில்களைக் கட்டுவோம்!'' என மக்களை உற்சாகப்படுத்தினார்.

யாவரும் மகிழ்ச்சியுடன் கட்ட ஆரம்பித்தார்கள்; எதிரிகள் இடைஞ்சல் செய்தனர்; கட்டுவதைத் தடுத்து யூதர்களை அழிக்கப்பார்த்தனர். ஆனால்,



செய்தி

தேவனுடைய சித்தப்படி செய்ய தேவன் எனக்கு வல்லமையையும் கிருபையையும் அளிக்கிறார்,

தேவன் அவர்களுடைய ஜெபத்தைக் கேட்டார். அந்த எதிரிகளை நெகேமியாவும் அவருடைய மக்களும் வென்றார்கள். அவ்வப்போது எதிரிகள் தீங்கு செய்ய முற்பட்டுக் கொண்டேயிருந்தனர். ஆனாலும் நெகேமியா இடைவிடாமல் தேவனைப் பற்றிக்கொண்டே இருந்தார். தேவனிடம் ஜெபிப்பதை நிறுத்தவில்லை. 52 நாட்களில் கட்டட வேலை முடிந்தது. தேவன் எல்லா வகையிலும், தம்முடைய பிள்ளைகளுக்கு உதவினார்; ராஜாவின் கண்களில் தயை கிடைக்கப் பண்ணினார். ராஜாவிடம் உதவிகேட்க நெகேமியாவுக்குத் தைரியம் தந்தார்.

என் செல்லமே, அதே தேவன் உனக்கும் உதவிசெய்ய ஆவலோடிருக்கிறார்!

செய்முறை: நெகேமியா தேவனுடைய உதவியோடு எதைக் கட்டினார்? கீழுள்ள அடையாளக் குறிகளுக்கு பொருத்தமான எழுத்துகளை எழுதினால் பதில் கிடைக்கும்.



ரு	ே	மி	ம	ன்	ல	எ	ை	க	ள	ச	ல்	தி
▶	▲	▼	◀	●	◘	◙	♠	♣	♥	♦	♪	♫